# 21

# உம்மஹாதுல் முஃமினீன்

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும், ஏக தெய்வக் கொள்கையைப் பாதுகாக்கவும் ஆதரவற்றவர்களை ஆதரிக்கவும் எனப் பல்வேறு காரணங்களுக்காக பல திருமணங்களைச் செய்தார்கள். இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமணம் செய்த அவரது மனைவியர்கள் உம்மஹாதுல் முஃமினீன்கள் (முஃமீன்களின் தாய்மார்கள்) என அழைக்கப் படுகின்றனர்.

இஸ்லாத்தை ஏற்ற ஒரே காரணத்திற்காக ஸஹாபாக்கள் கொடூரமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள். இவ்வாறு துன்புறுத்தப்பட்டவர்கள் தனது உயிர், உடல், மானம், சொத்து, சொந்தபந்தங்களை இழந்து நிர்க்கதியானார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காக பத்ர், உஹத் போன்ற யுத்தங்களில் கலந்து கொண்ட ஸஹாபாக்கள் பலர் ஷஹீதானார்கள். இதனால் அவர்களின் மனைவியர்கள் விதவையானார்கள். இவ்வாறு விதவையானவர்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மறுவாழ்வளித்தார்கள். சிலரை நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே முன்வந்து திருமணம் செய்து வாழ்வளித்தார்கள். இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் வாழ்வளிக்கப்பட்ட அன்னையர்களான ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா, உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா ஆகியோர்களைப் பற்றி இவ்வத்தியாயத்தில் அறிந்து கொள்வோம்.

## அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா

அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் தகப்பனார் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆவார்கள். இவர்கள் நுபுவ்வத்துக்கு 05 வருடங்களுக்கு முன் பிறந்தார்கள். இவர்களது முதற் கணவர் ஹானிஸ் பின் ஹதபா ஸஹ்மி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆவார்கள். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது இக்குடும்பத்தினர் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அப்போது குறைஷியர்களால் இழைக்கப்பட்ட இன்னல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக இருவரும் அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் சென்றார்கள். மதீனா ஹிஜ்ரத்திலும் இருவரும் கலந்து கொண்டார்கள்.

பத்ர் யுத்தத்திலும் கலந்து கொண்ட ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கணவர் ஹானிஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காயமுற்று சிறிது காலத்தின் பின் மதீனாவில் வபாத்தானார்கள். அப்போது அன்னை ஹப்ஸாவுக்கு வயது இருபது. உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது மகள் ஹப்ஸாவை முதலில் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் அடுத்து உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் மணம்புரிந்து கொள்ளுமாறு வேண்டினார்கள். இருவரும் சம்மதிக்கவில்லை. பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க ஹிஜ்ரி 2ஆம் ஆண்டில் விவாகம் நடந்தேறியது.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹாவுக்கு அடுத்தபடியாக ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹாவே சிறந்த கல்வியும் மார்க்க ஞானமும் உள்ளவராக இருந்தார்கள். எழுத, வாசிக்கத் தெரிந்த இவர்களிடம் வந்து பெண்கள் கல்வி கற்பார்கள். அறுபதுக்கு மேற்பட்ட ஹதீஸ்களை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அநேகமாக பகற் காலங்களை நோன்பு நோற்பதிலும் இராக் காலங்களை இறை வணக்கத்திலும் கழிப்பார்கள். மக்களிடையே குழப்பங்கள், பேதங்கள் ஏற்படுவதை அதிகம் வெறுத்தார்கள். அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்ட அல்குர்ஆன் பிரதி உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் பாதுகாப்பிலேயே இருந்தது. இவர்கள் தனது 63 வது வயதில் மதீனாவில் வபாத்தானார்கள்.

## உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா

அன்னை உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் இயற் பெயர் ‘‘ஹிந்த்’’ என்பதாகும். இவர் குறைஷி வம்சத்தவர். இவரது தந்தை அபூஉமையா என்பவராவார். இவருடைய முதற் கணவர் அபூஸல்மா மக்ஸூமி ரழியல்லாஹு அன்ஹு என்றழைக்கப்பட்ட அப்துல்லா பின் அப்துல் அஸத் என்பவராவார். நபித்துவத்தின் ஆரம்பத்திலேயே தன் கணவருடன் இஸ்லாத்தை ஏற்றார். அபீஸீனியா, மதீனா ஹிஜ்ரத்களில் தன் கணவருடன் பங்குபற்றினார். மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற

பெண்களில் இவரும் முக்கியமானவர். உஹது யுத்தத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக கணவர் அபூஸல்மா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் உயிர் துறந்தார்கள். இந்நிலையிலேயே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரி 04 ஆம் ஆண்டு அன்னை உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்தார்கள்.

உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மிகவும் பொறுமையுள்ளவர்கள். கந்தக் யுத்தத்தின் போதும் கைபர் யுத்தத்தின் போதும் இவர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கவலையைப் போக்குவதற்காகவும் பிரச்சினைகள் தீர்வதற்காகவும் குர்பான் கொடுப்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியவரும் இவரே. இவர் தாராள மனப்பாங்கும் புத்தியும் ஞானமும் நிறைந்தவர். தாபிஈன்களுக்கு ஆசானாக இருந்த இவர் 378 ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள்.

உம்மஹாதுல் முஃமினீன்களில் இறுதியாக வபாத்தாகியவர் உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களே. இவர்கள் தனது 84 ஆம் வயதில் ஹிஜ்ரி 63 இல் வபாத்தானார்கள்.

### பயிற்சி

இடைவெளி நிரப்புக.

1. அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் தகப்பன் .................. ஆவார்.
2. அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கணவர் ....................... யுத்தத்தில் காயமடைந்து ஷஹீதானார்கள்.
3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை ஹிஜ்ரி ................ ஆம் ஆண்டு மறுமணம் செய்தார்கள்.
4. அன்னை உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் முதற் கணவர் ........................ யுத்தத்தில் ஷஹீதானார்கள்.
5. உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களே ஹுதைபியா உடன்படிக்கையின்போது ..................... கொடுப்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியவர் ஆவார்.